மத்திய அரசாங்கமும் அங்கீரித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த நடவடிக்கைகள் எல்லாம் உரியவாறு சட்டப்பூர்வமாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 23, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு உணவு அமைச்சர்.

23—

தமிழகத்தில் கூடுதல் நவீன அரிசி ஆலைகள் அமைத்தல்.

*16454—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசியாக்குவதற்கு இந்திய உணவுக் கழகம் உதவ வேண்டும் என்று தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் மேலும் நவீன அரிசி ஆலைகளை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தமிழகத்தில் மேலும் புதிய நவீன அரிசி ஆலைகளை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும் மாநில அரசும் இந்த நிதி ஆண்டில் அதிக அளவிலே நல்ல தரமான நெல்லைக் கொள்முதல் செய்து, அந்த நெல்லை அரிசியாக்குகின்ற வகையில் போதிய நவீன அரிசி ஆலைகள் இல்லாத காரணத்தினால் அதனை தனியார்களிடம் கொடுத்து, அவர்கள் தரக் குறைவான நெல்லைப் பயன்படுத்தி—தரம் உள்ள அரிசிகளை வெளி மார்க்கெட்டில் விற்றுவிட்டு, தரக் குறைவான அரிசியை பொது மக்களுக்கு விநியோகம செய்கின்ற ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தினால், அதிக அளவிலே தரமான நெல்லை கொள்முதல் செய்து தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்

TRUTH ALONE TRIUMPHS

ஏழை எளிய மக்களுக்கு தரமான அரிசி தர வேண்டும் என்கிற நிலையில் இருக்கின்றபோது,— இதுபோன்ற தனியார்களுக்கு இந்த அரிசி ஆலைகளுக்கு அரிசி செய்கின்ற ஒரு திட்டத்தை கொடுக்கின்ற காரணத்தினால், தனியார்கள் பலவிதமான லாபங்களை அனுபவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. உமி கல் எடுப்பதற்கும், தவிடு எடுப்பதற்கும், தரம் கெட்ட அரிசிகளை ஒருசிலர் தீட்டிக் கொடுப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், இதனைத் தவிர்த்து, நவீன அரிசி ஆலையை மத்திய அரசும் மாநில அரசும் கலந்து நவீன அரிசி ஆலை அமைக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாட்டிலே கொள்முதல் செய்யப்படுகிற நெல் மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற, ஃபுட் கார்பரேஷன் ஆஃப் இந்தியா என்று அழைக்கப்படுகிற அந்த நிறுவனத்தின் பொறுப்பில் இருக்கிற ஆலைகளுக்கு அரைப்பதற்குத் தரப்படுகிறதா என்று கேட்டு இருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் அனுபவத்தில் அவர்கள் நடத்துகிற ஆலைகள் முழுவதுமாக செயல்பட முடியாமல், இயங்க முடியாமல் இருந்து வருகிறது என்பதுதான் உண்மை.

முற்பகல் 10.20

ஆனால் நாம் நிர்வாகிக்கிற ஆலைகள் முறையாக நடைபெற்று வருகின்றன. ஆனால் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். தனியார் அரைவை ஆலைகளில் கொடுப்பதால் தரக்குறைவு ஏற்படுகிறது, முறைகேடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதால் நம்முடைய அரசு பொறுப்பிலே ஆலைகளை நடத்தலாம் என்று அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில் அவர்கள் நெல் கொள்முதல் செய்வதைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரிசியாகத்தான் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம்தான் இங்கே ஏகபோகக் கொள்முதல் சென்ற ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்தி வந்தோம். இந்த ஆண்டு அதிலே கொள்கை மாறுதல் செய்து அதனுடைய நல்ல பலன்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய ஆலைகள் இன்றைக்கு ஏறத்தாழ நம்மிடத்தில் இருக்கிற 23 நவீன அரிசி ஆலைகளில் 43,600 டன்கள் மாதந்தோறும் அரைத்துக் கொண்டிருக்கிறோம். இது போதாது என்ற காரணத்தினால் தான் சுமார் 580 தனியார்களுக்கு அரைவைக்கு நாம் ஒப்பந்தம் செய்து அவர்களை அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதிலே துரதிஷ்டவசமான ஒரு உண்மை என்னவென்றால் நம்முடைய அரிசி

ஆலைகவில் அரைக்கப்படுகிற அந்த அரிசியின் தரத்தை விட தனியார் ஆலைகளில் அரைத்துத் தரப்படுகிற அந்த அரிசியின் தரம் தான் கொஞ்சம் உயர்ந்ததாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அரிசி ஆலைகளை நாம் வாடகைக்கு எடுத்து, நம்முடைய அரசு சம்பந்தமான அதிகாரிகளைப் பயன் படுத்தி, ஒருசிலர் செய்கிற தவறுகளையும் தவிர்க்கும் வகையில் அவைகளை நிர்வாகம் செய்ய அரசிடம் புதிய திட்டங்கள் இருக்கிறதா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிர்வாகத்தை எடுத்துக் கொண்டாலே பல நிர்வாகங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்போல் பல நிர்வாகங்களிலே சிறப்பாக நடைமுறைகள் நடத்தப்பட முடியாத சூழ்நிலைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. தனியார்களுக்கு இருக்கிற அக்கறை நம்முடைய அரசு பொறுப்பிலே இருக்கிற சில நிர்வாகங்களுக்கு ஏற்படுவதில்லை. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் சென்ற நான்கைந்து நாட்களுக்கு முன்பு ஒரு சுற்றுப் பயணத்தில் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்கிற இடங்களுக்கு நான் சென்று பார்த்தேன். இரவு 10 மணிக்கு ஒரு இடத்தில் சென்று பார்த்தபோது அங்கே 8,000 நெல் மூட்டைகள் ரோட்டிலே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அங்கே இருக்க வேண்டிய மில் கிளார்க்கும் இல்லை அங்கே ஹெல்பரும் இல்லை. வாட்ச்மேனும் இல்லை. ஏதோ தர்மத்திற்கு கட்டுப்பட்டு அந்த 8,000 மூட்டைகளும் ரோட்டிலே காப்பற்றப்பட்டு கொண்டிருந்தன. இது அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற நம்முடைய நிர்வாகிகள் நம்மிடத்தில் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு பலன்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இருக்கிற ஒரு பொறுப்புணர்ச்சி. இதுவே ஒரு தனியார் வாங்கி வைத்திருந்தால் அந்த இடத்தில் அவன் இரவு பகலாக படுத்துக்கொண்டு காத்துக்கொண்டு இருப்பான். நான் இதை உதாரணத்திற்கு தான் சொல்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய ஆலைகள் எல்லாம் 25 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டவை. அது மாடர்ன் ரைஸ் மில் என்று பெயரே தவிர அது மாடர்ன் டெக்னாலஜியில் இயங்கவில்லை. இந்த நேரத்தில் இந்த கேள்வியின் மூலம் நம்முடைய மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரையில் இந்த அரைவை ஆலைகளைப் பற்றி முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் யாரும் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. இப்போதுதான் நம்

முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து நெல் கொள்முதல் செய்து அதை நல்ல அரிசியாக அரைத்துக் கொடுக்க முடியாமல் ஏன் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, இந்த அரிசி ஆலைகளை எல்லாம் பெயருக்கு ஏற்றபடி நவீனஅரிசி ஆலையாக ஆக்குவதற்கு என்னதிட்டம் என்பதை மிகத் தீவிரமாகப் பரிசீலித்து கொண்டிருக்கிறார்கள். மாடர்ன் டெக்னாலஜி, அமெரிக்கன் டெக்னாலஜி, தாய்லாந்தில் எப்படி அரிசி மிகச்சிறந்த முறையில் தயாரிக்கப்படுகிறது. என்பதை எல்லாம் அவர்கள் ஆராய்ந்து அதற்கான மிக முக்கியமான முடிவுகளை அறிவிக்க இருக்கிறார்கள். அது நம்முடைய நிதிநிலை அறிக்கையில் கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து அதன்மூலம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள். அப்போது இந்த 23 ஆலைகளையும் மிகச்சிறந்த ஆலைகளாக எதிர்காலத்தில் மாற்றி நல்ல அரிசியை, தரமுள்ள அரிசியைத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சி அடைகிற வகையில் அந்த முடிவுகள் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24 திருமதி என். கனகவல்லி இருக்கையில் இல்லை.

வினா எண் 25 திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

25—

திருவாரூர் வட்டம் நாட்டிரப்பு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்.

* 19857— திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் வட்டம் கீவளூர் ஒன்றியம் நாட்டிரப்பு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே,